திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் பீன்ஸ்,தக்காளி,அவரை விலை உயர்வு**

First Published : 16 Apr 2010 01:45:34 AM IST

ஒட்டன்சத்திரம்,ஏப்.15: ஒட்டன்சத்திரம் காந்தி மார்க்கெட்டில் பீன்ஸ்,தக்காளி,அவரை விலை உயர்ந்து உள்ளது. ஒட்டன்சத்திரம் காந்தி மார்க்கெட்டிற்கு தற்பொழுது காய்கறிகளின் வரத்து குறைந்து விட்டதால்,அவற்றின் விலைகள் சற்று உயர்ந்து வருகிறது. ஒட்டன்சத்திரம் அருகே உள்ள வடகாடு மலைப்பகுதியில் இருந்து வரும் பீன்ஸ்க்கு மட்டும் நல்ல விலை கிடைக்கிறது. பிற பகுதிகளில் இருந்து வரும் வரக்கூடிய தக்காளி,அவரை போன்ற காய்கறிகள் வரத்து குறைந்து விட்டதால் அவற்றின் விலைகள் நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது.

வியாழக்கிழமையன்று மார்க்கெட்டில் விற்பனையான மற்ற காய்கறிகளின் விலை நிலவரம் வருமாறு:

முருங்கைக்காய் கிலோ ரூ.3-7-க்கும், பொரியல் தட்டப்பயிர் கிலோ ரூ.15-க்கும், பீன்ஸ் கிலோ ரூ.42-க்கும்,பாகற்காய் கிலோ ரூ.16-க்கும், பீட்ரூட் கிலோ ரூ.11-க்கும்,புடலைக்காய் கிலோ ரூ.11-க்கும்,பல்லாரி வெங்காயம் கிலோ ரூ.8-9-க்கும்,சின்னவெங்காயம் கிலோ ரூ.7-13-க்கும், 20 பூ கொண்ட காளிபிளவர் பை ரூ.125-க்கும்,14 கிலோ கொண்ட தக்காளி பெட்டி கிலோ ரூ.100-க்கும்,டிஸ்கோ கத்திரிக்காய் ஒரு பை ரூ.300-க்கும்,வெண்டைக்காய் கிலோ ரூ.9-க்கும்,சுரைக்காய் கிலோ ரூ.1.50-க்கும், நார்த்தங்காய் கிலோ ரூ.40-க்கும், பூசணிக்காய் கிலோ ரூ.6-10-க்கும், கொத்தவரை கிலோ ரூ.6-12-க்கும், அவரை கிலோ ரூ.22-30 வரையும் விலைக்கு விற்கப்பட்டது. அதே போல மாங்காய் கிலோ ரூ.10 முதல் வரை 15 வரை விற்பனை செய்யப்பட்டது.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 71.98 அடி**

First Published : 16 Apr 2010 07:05:11 AM IST

ஈரோடு, ஏப்.15: பவானிசாகர் அணை நீர்மட்டம் வியாழக்கிழமை 71.98 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 110 கன அடி வீதம் தண்ணீர் வந்தது. பாசனத்திற்கு வாய்க்காலில் விநாடிக்கு 2300 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையி0ன் நீர் இருப்பு 12 டிஎம்சி.

**பொள்ளாச்சி பகுதியில் பல லட்சம் தென்னைகள் வாடல்**

First Published : 16 Apr 2010 07:12:00 AM IST

பொள்ளாச்சி, ஏப். 15: பொள்ளாச்சி பகுதியில் நிலவும் கடும் வெயிலின் காரணமாக பல லட்சம் தென்னை மரங்கள் வாடுகின்றன. இதனால் தென்னை நார்க்கழிவுகளைப் போட்டு, மரங்களைக் காப்பாற்ற விவசாயிகள் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

கோவை மாவட்டத்தில் சுமார் 2 லட்சம் ஏக்கர் பரப்பளவில் தென்னை மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. இவற்றில் சுமார் 1.50 கோடி தென்னை மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. கடந்த சில ஆண்டுகளுக்கு முன் நிலவிய கடும் வறட்சி காரணமாக, கோவை மாவட்டத்தில் மட்டும் சுமார் 10 லட்சம் தென்னை மரங்கள் வறண்டன. மேலும் சில லட்சம் மரங்கள் காய்க்கும் திறனை இழந்தன.

ஈரியோபைட் தாக்குதல் உள்ளிட்ட நோய்களாலும் தென்னை மரங்கள் உயிரிழந்ததால் விவசாயிகளுக்கு பல லட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், கடந்த சில மாதங்களாக தென்னை மரங்களை கேரளா வாடல் நோய் தாக்கியது. இதனால் தென்னை மரங்கள் ஆயிரக் கணக்கில் வாடின.

இப்போது கடும் கோடை வறட்சியும் துவங்கியுள்ளது. ஒவ்வொரு நாளும் தென்னை மரங்களுக்குத் தேவையான தண்ணீர் கிடைக்காமல் விவசாயிகள் விரக்திக்கு உள்ளாகியுள்ளனர்.

நெகமம், கிணத்துக்கடவு, கரப்பாடி, வடசித்தூர், ரமணமுதலிபுதூர் உள்ளிட்ட பல பகுதிகளில் இப்போது விவசாயிகள் தென்னை நார்க்கழிவுகளை மரங்களைச் சுற்றிப் போட்டு வருகின்றனர் (படம்). இதனால் ஒரு முறை தண்ணீர் விட்டால் அதன் ஈரம் தென்னை மரத்தின் வேரைச் சுற்றிலும் சில நாள்களுக்கு இருக்கிறது.

தென்னை நார்க்கழிவுகளைப் போட்டாவது தென்னை மரங்களைக் காப்பாற்றும் முயற்சியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். தற்போதைய நிலை நீடித்தால், மே மாத இறுதிக்குள் பல லட்சம் தென்னை மரங்கள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தென்னை மரங்கள் வறண்டால் விவசாயிகளின் நிலை கேள்விக்குறி ஆகிவிடும்.

**பொள்ளாச்சி பகுதியில் பல லட்சம் தென்னைகள் வாடல்**

First Published : 16 Apr 2010 07:12:00 AM IST

பொள்ளாச்சி, ஏப். 15: பொள்ளாச்சி பகுதியில் நிலவும் கடும் வெயிலின் காரணமாக பல லட்சம் தென்னை மரங்கள் வாடுகின்றன. இதனால் தென்னை நார்க்கழிவுகளைப் போட்டு, மரங்களைக் காப்பாற்ற விவசாயிகள் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

கோவை மாவட்டத்தில் சுமார் 2 லட்சம் ஏக்கர் பரப்பளவில் தென்னை மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. இவற்றில் சுமார் 1.50 கோடி தென்னை மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. கடந்த சில ஆண்டுகளுக்கு முன் நிலவிய கடும் வறட்சி காரணமாக, கோவை மாவட்டத்தில் மட்டும் சுமார் 10 லட்சம் தென்னை மரங்கள் வறண்டன. மேலும் சில லட்சம் மரங்கள் காய்க்கும் திறனை இழந்தன.

ஈரியோபைட் தாக்குதல் உள்ளிட்ட நோய்களாலும் தென்னை மரங்கள் உயிரிழந்ததால் விவசாயிகளுக்கு பல லட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், கடந்த சில மாதங்களாக தென்னை மரங்களை கேரளா வாடல் நோய் தாக்கியது. இதனால் தென்னை மரங்கள் ஆயிரக் கணக்கில் வாடின.

இப்போது கடும் கோடை வறட்சியும் துவங்கியுள்ளது. ஒவ்வொரு நாளும் தென்னை மரங்களுக்குத் தேவையான தண்ணீர் கிடைக்காமல் விவசாயிகள் விரக்திக்கு உள்ளாகியுள்ளனர்.

நெகமம், கிணத்துக்கடவு, கரப்பாடி, வடசித்தூர், ரமணமுதலிபுதூர் உள்ளிட்ட பல பகுதிகளில் இப்போது விவசாயிகள் தென்னை நார்க்கழிவுகளை மரங்களைச் சுற்றிப் போட்டு வருகின்றனர் (படம்). இதனால் ஒரு முறை தண்ணீர் விட்டால் அதன் ஈரம் தென்னை மரத்தின் வேரைச் சுற்றிலும் சில நாள்களுக்கு இருக்கிறது.

தென்னை நார்க்கழிவுகளைப் போட்டாவது தென்னை மரங்களைக் காப்பாற்றும் முயற்சியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். தற்போதைய நிலை நீடித்தால், மே மாத இறுதிக்குள் பல லட்சம் தென்னை மரங்கள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தென்னை மரங்கள் வறண்டால் விவசாயிகளின் நிலை கேள்விக்குறி ஆகிவிடும்.

**மரபணு மாற்ற பருத்தி, தக்காளிக்கும் தடைவிதிக்க வேண்டும்**

First Published : 16 Apr 2010 06:35:00 AM IST

தருமபுரி, ஏப்.15: கத்திரியை போன்றே மரபணு மாற்ற பருத்தி, தக்காளி விதைகளுக்கும் அரசு தடை விதிக்க வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. இது குறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில பொதுச் செயலர் வே. துரைமாணிக்கம் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை:

பல்வேறு நிலைகளுக்குப் பிறகு மரபணு மாற்ற கத்திரிக்காய்க்கு தமிழக அரசு தடை விதித்துள்ளதை தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வரவேற்கிறது. அதே போல மரபணு மாற்ற பருத்தி, தக்காளி உள்ளிட்ட முக்கிய வேளாண் பொருள்களுக்கும் தடைவிதிக்க வேண்டும்.

உழவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள உழவர் சந்தைகளில் உழவர்களை மட்டுமே விற்பனை செய்ய அனுமதிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல கோரிக்கைகளை அவர் வலியுறுத்தியுள்ளார்.

**இன்று விவசாயிகள் குறைகேட்கும் கூட்டம்**

First Published : 16 Apr 2010 12:52:48 AM IST

கடலூர், ஏப். 15: கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்கும் கூட்டம் இன்று (வெள்ளிக்கிழமை) மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் நடைபெறும் என்று மாவட்ட ஆட்சியர் பெ.சீதாராமன் அறிவித்துள்ளார்.

÷இதுகுறித்து ஆட்சியர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

÷கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் வெள்ளிக்கிழமை காலை 10-30 மணிக்கு நடைபெறும். கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது விவசாயம் சார்ந்த குறைகளையும் கோரிக்கைகளையும் தெரிவிக்கலாம்.

÷கோரிக்கைகளை தெரிவிக்க அனைவருக்கும் வாய்ப்பு வழங்கப்படும். எழுத்துப்பூர்வமாகவும் கோரிக்கைகளைத் தெரிவிக்கலாம். தெரிவிக்கப்படும் குறைகளுக்கு சம்பந்தப்பட்ட துறையின் உயர் அலுவலர்கள் உரிய பதில் அளிக்கவும், தொடர் நடவடிக்கை எடுக்கவும் மாவட்ட ஆட்சியரால் அறிவுறுத்தப்பட்டு உள்ளது. இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

**ஏப்.23-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 16 Apr 2010 05:46:21 AM IST

மதுரை, ஏப். 15: மதுரை மாவட்டத்தில் வரும் 23}ல் விவசாயிகள் குறைதீர்க் கூட்டம், ஆட்சியர் அலுவலக வளாகக் கூட்ட அரங்கில் நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்துக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமை வகிக்கிறார். காலை 10.30 மணியளவில் நடைபெறும் இக்கூட்டத்தில், விவசாயம் தொடர்புடைய அனைத்துத் துறை அலுவலர்களும் பங்கேற்கவுள்ளனர்.

எனவே, விவசாயிகள் உள்ளிட்டோர் பங்கேற்க வேண்டும் என, மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் தனது செய்திக் குறிப்பில் கேட்டுக்கொண்டுள்ளார்.

**வடகரையில் மரக்கன்றுகள் நடும் விழா**

First Published : 16 Apr 2010 01:48:06 AM IST

கடையநல்லூர், ஏப். 15: கடையநல்லூர் அருகேயுள்ள வடகரையில் எக்ஸ்னோரா சார்பில் மரக்கன்றுகள் நடும் விழா (படம்) நடைபெற்றது.

வடகரை அரசு ஆரம்ப சுகாதார நிலையப்பகுதியில் நடைபெற்ற விழாவிற்கு வடகரை பேரூராட்சி மன்றத் தலைவர் அஜீஸ் முத்துமீரான் தலைமை வகித்தார்.

கடையநல்லூர் சக்தி எக்ஸ்னோரா தலைவர் டாக்டர் தங்கம்மூர்த்தி, மாவட்டத் தலைவர் விஜயலெட்சுமி, மாவட்டச் செயலர் சங்கரநாராயணன் உள்ளிட்டோர் மரக்கன்றுகளை நட்டனர்.

இதில் டாக்டர் சுபேர்ஹசன்முகம்மதுகான், பாண்டியன் கிராம வங்கி தொழிற்சங்க பிரதிநிதி ஜெயக்குமார், பராசக்தி கல்லூரிப் பேராசிரியர்கள் மதுமதி, தமிழ்மணி, கயற்கன்னி, சுகாதார அலுவலர் மாரிமுத்து, வழக்கறிஞர் பாலசுப்பிரமணியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் 200 மரக்கன்றுகள் நடப்பட்டன. முத்துக்குமார் நன்றி கூறினார்.

தினமலர்

**தேங்காய் நேரடி கொள்முதல்: 'டான்பேட்' கைவிரிப்பு**

பொள்ளாச்சி : விவசாயிகளிடம் இருந்து நேரடி தேங்காய் கொள்முதல் செய்யும் திட் டம் இப்போதைக்கு இல்லை என 'டான்பேட்' அதிகாரிகள் கைவிரித்துள்ளனர். கொப்பரைக்கு ஆதரவு விலை நிர்ணயம் செய்து, மத்திய அரசு கொள்முதல் செய்கிறது. இதனால், தென்னை விவசாயிகளுக்கு நேரடியாக பலன் இல்லை; வியாபாரிகளும், இடைத்தரகர்களும் மட்டுமே பலனடைந்தனர். எனவே, கேரளாவைப் போல் தமிழகத்தில் விவசாயிகளிடம் தேங்காய் நேரடியாக கொள்முதல் செய்ய வேண் டும் என்று விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.

அ.தி.மு.க., - ம.தி.மு.க., எம்.பி.,க்கள் பார்லிமென் டிலும் வலியுறுத்தினர்.இதையடுத்து, நேரடியாக தேங்காய் கொள்முதல் செய்ய 'நேபட்' அதிகாரிகள், தமிழகத்தின் டான் பேட் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டனர். கொப்பரை கொள்முதல் செய்ய டான்பேட் மற்றும் கூட்டுறவு துறையினர் இடையே ஒப்பந்தம் ஏற்படுத் தப் பட்டது. இன்னும் ஒருவாரத்துக்குள் கொப்பரை கொள்முதல் துவங்கப்பட உள்ளது. ஆனால், உரிக்கப் பட்ட தேங்காய் நேரடியாக கொள்முதல் செய்வது பற்றி எவ்வித அறிவிப்பும் வெளியிடப்படவில்லை.

டான்பேட் அதிகாரிகள் கூறியதாவது:விவசாயிகளிடம் இருந்து தேங்காயை நேரடியாக கொள்முதல் செய் தால், அதை பதப்படுத்துவதில் நிறைய சிக்கல் <உள் ளது. மட்டை உரிக்கப் பட்ட குடுமி இல்லாத தேங்காயை விவசாயிகள் கொண்டு வர வேண்டும். அதை எடைக்கணக்கில் கொள்முதல் செய்ய வேண்டும்.கூட்டுறவு சங்கம் மூலமோ, தனியார் கொப் பரை உலர்க்களம் வைத் துள்ளவர்களிடமோ உடன்பாடு செய்து கொப் பரை உற்பத்தி செய்ய வேண்டும். கொப்பரையாக்கும் போது 'அவுட் புட்' கிடைக்காவிட்டால், அதிகாரிகளுக்கு சிக்கல் ஏற்படும். மேலும், கூட்டுறவுச் சங்கத்துக்கு உலர்களம் வசதியில்லை. அதனால், இந்தாண்டு தேங்காய் நேரடி கொள்முதல் துவங்குவற்கு வாய்ப்பு இல்லை. விவசாயிகள் கொப்பரை உற்பத்தி செய்து, ஆதரவு விலைக்கு விற்பனை செய்ய வேண்டும்.இவ்வாறு, அவர்கள் தெரிவித்தனர்.

தமிழகத்தில் இந்தாண்டு விவசாயிகளிடம் இருந்து நேரடி தேங்காய் கொள்முதல் துவங்கப்படும் என விவசாயிகள் காத்திருந்த நேரத்தில், நேரடி தேங்காய் கொள்முதலுக்கு சாத்தியமில்லை என்று அதிகாரிகள் கைவிரித்துள்ளனர். தேங்காய் கொள்முதலுக்கு மத்திய அரசு பச்சைக்கொடி காட்டியும், மாநில அரசு முயற்சி எடுக் காததால் தாங்கள் ஏமாற் றம் அடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**வேளாண் பல்கலைக்கு 154 கோடி ரூபாய் திட்ட அனுமதி: பல்கலை துணைவேந்தர் பெருமிதம்**

கோவை : கோவை வேளாண் பல்கலையின் ஆராய்ச்சித் திறனை அங்கீகரிக்கும் வகையில், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கவுன்சில் 154 கோடி ரூபாய் செலவில் 17 திட்டங்களுக்கு அனுமதி அளித்துள்ளது.'தேசிய வேளாண் புதுமை திட்டம்' குறித்த இரண்டாவது வருடாந்திர பயிலரங்கம், கோவை வேளாண் பல்கலையில் நேற்று துவங்கியது. இதையொட்டி, வேளாண் விளைபொருட்கள், மீன் உணவுகள், மலர்கள் குறித்த கண்காட்சியும் நடந்தது.

பல்வேறு மாநிலங்களை சேர்ந்த வேளாண் விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், பேராசிரியர்கள் பங்கேற்றனர். பயிலரங்கை துவக்கி வைத்து பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி பேசியதாவது:கோவை வேளாண் பல்கலை சார்ந்த கல்லூரிகள், ஆராய்ச்சி மையங்களில், 1,275 விஞ்ஞானிகள் பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். பல்கலை மற்றும் பல்கலை சார்ந்த ஆராய்ச்சி நிறுவனங்களில் தற்போது 401 ஆராய்ச்சித் திட்டங் கள் நடைபெற்று வருகின்றன. இதில் 218 திட்டங்களுக்கு இந்திய அரசும், 183 திட்டங்களுக்கு தனியார் மற்றும் வெளிநாட்டு ஏஜென்சிகளும் நிதியுதவி அளிக்கின்றன. இந்த ஆராய்ச்சிகளால் விவசாயிகள் பலன் பெற, இதுவரை 526 வேளாண் பொருட்கள், 163 தோட்டக்கலை ரகங்கள், 9 காளான் வகைகள், 2 மர வகைகள், 143 வயல் உபகரணங்கள், ஆயிரக்கணக்கான வேளாண் தொழில் நுட்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.இதன் மூலம், மாநிலத்தின் வேளாண் உற்பத்தியை பெருக்குவதில் பல்கலை முக்கிய பங்கு வகிக்கிறது.

பல்கலையின் ஆராய்ச்சித் திறனை அங்கீகரிக்கும் வகையில், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கவுன்சில் 154 கோடி ரூபாய் செலவில் 17 திட்டங்களுக்கு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டங்கள் தேசிய வேளாண் புதுமை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. உள்நாட்டு, அயல்நாட்டு மலர், மாம்பழ ஏற்றுமதி, காட்டுத் தேனீ வளர்ப்பு உள்ளிட்ட ஆறு திட்டங்களை செயல்படுத்துவதில், இரு ஆண்டுகளில் வேளாண் பல்கலை சிறந்த சாதனை புரிந்துள்ளது. மலர் உற்பத்தியில் தமிழகம் இரண்டாவது இடத்தையும், மல்லிகைப்பூ உற்பத்தியில் முதலிடத்தையும் டிக்கிறது. மலர் ஏற்றுமதி குறித்த இத்திட்டம், மலர் உற்பத்தியாளர்களுக்கும் தொழில் முனைவோருக்கும் சிறந்த ஊக்கமாக அமையும். திட்டங்கள் முடிவடையும்போது, மலர், தேன், பழங்கள் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதலில் வேளாண் ல்கலையின் பங்கு சிறப்பானதாக அமையும்.

நம் நாட்டின் பாரம்பரிய முறையிலான வேளாண்மையை, மதிப்பூட்டப்பட்டதாக மாற்றி, புது சகாப்தம் படைக்க தசிய வேளாண் புதுமைத் திட்டங்கள் உதவும்.இவ்வாறு, முருகேசபூபதி பேசினார்.இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கவுன்சிலின் இயக்குனர் பங்காலி பாபூ பேசுகையில், "அறிவியல் மற்றும் ஆராய்ச்சிகளால் மட்டும் அனைத்து பிரச்னைகளுக்கும் தீர்வு கண்டு விட முடியாது. புதுமையான கண்டுபிடிப்புகளால் பல பிரச்னைகளுக்கு தீர்வு கிடைத்துள்ளது. முன்பு சிறு பட்ஜெட்டில் பெரிய திட்டங்களை செயல்படுத்தினோம். "தற்போது பெரிய பட்ஜெட்டில் 188 சிறு திட்டங்களை செயல்படுத்துகிறோம். வேளாண் தொழில் நுட்ப மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதில் மாநில அரசுகள் ஒத்துழைப்பு அளிப்பதில்லை," என்றார்.பல்கலை ஆராய்ச்சி இயக்குனர் பரமாத்மா, தேசிய புதுமைத் திட்ட ஒருங்கிணைப்பாளர் கோயல் உட்பட பலர் பங்கேற்றனர். இப்பயிலரங்கம் இன்று நிறைவு பெறுகிறது.

**வேளாண் பல்கலை - ஜெர்மன் பல்கலை ஆராய்ச்சி, கல்விக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம்**

கோவை : தமிழ்நாடு வேளாண் பல்கலை - ஜெர்மனியின் 'ஜஸ்டஸ் லீபிக்' பல்கலை இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ற்படுத்தப்பட்டது. இதற்கான நிகழ்ச்சி வேளாண் பல்கலையில் நடந்தது. ஒப்பந்தத்தில் வேளாண் பல்கலை பதிவாளர் சுப்பையன், முதுநிலை கல்வி முதன்மை பேராசிரியர் உதயசூரியன், 'ஜஸ்டஸ் லீபிக்' பல்கலை பயன்பாட்டு நுண்ணுயிரியல் துணை பேராசிரியர் பென்கிசர் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

வேளாண் பல்கலை பதிவாளர் சுப்பையன் கூறியதாவது: இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் இவ்விரு பல்கலைகளில் இருந்தும் விஞ்ஞானிகள், மாணவர்கள் கல்வி, ஆராய்ச்சி சம்பந்தமான தகவல் பரிமாற்றம், கூட்டுக் கல்வி, பயிற்சி திட்டங்கள், கூட்டு ஆய்வுக் கட்டுரைகள் பதிப்பித்தல் மற்றும் கருத்தரங்குகள் நடத்துதல் ஆகியவற்றை மேற்கொள்ளலாம். வேளாண் பல்கலையின் வேளாண் நுண்ணுயிரியல் துறை, ஜஸ்டஸ் லீபிக் பல்கலையின் பயன்பாட்டு நுண்ணுயிரியல் துறை இணைந்து, ஜவ்வரிசி தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவு நீரை

சுத்திகரிக்க, நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்ட செயற்கை நஞ்சை தொட்டிகளை உருவாக்கி, அதிலுள்ள நுண்ணுயிர்களின் பல்லுயிர் பாங்கை ஆய்வு செய்வற்கான திட்டத்தை செயல்படுத்தி வருகின்றன.

இக்கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றி மற்றும் ஆய்வு முடிவுகளில் ஏற்பட்ட இருதரப்பு நன்மைகளால் தற்போது கல்வி மற்றும் ஆய்வு பரிவர்த்தனைக்கான ஒப்பந்தம் ஏற்படுத்தப் பட் டுள்ளது. இவ்விரு பல்கலைகளின் ஒத்துழைப்புடன் பிற துறைகளுக்கும் ஆய்வு விரிவுபடுத்தப்படும். இவ்வாறு, சுப்பையன் தெரிவித்தார்.
வேளாண் நுண்ணுயிரியல் துறை தலைவர் குமார், பேராசிரியர் ராஜசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**வேளாண் பல்கலை நீச்சல் குளத்தில் சிறுவர், சிறுமியருக்கு பயிற்சி**

கோவை : கோவை வேளாண் பல்கலை நீச்சல் குளத்தில் சிறுவர், சிறுமியர், ஆண்களுக்கான கோடை கால சிறப்பு பயிற்சி முகாம் நேற்று துவங்கியது. கோவை வேளாண் பல்கலை நீச்சல் குளத்தில் ஆண்டுதோறும் கோடை கால விடுமுøறையை முன்னிட்டு, சிறப்பு நீச்சல் பயிற்சி முகாம் நடந்து வருகிறது. இந்தாண்டும் வழக்கம்போல் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர் மற்றும் மக்கள் 300 பேர் நேற்று அடிப்படை பயிற்சியில் பங்கேற்றனர்.

பயிற்சி முறைகள்: 'பாபிங்', 'ஹேண்ட் மற்றும் லெக் மூவ்மென்ட்', 'சைடுவே ப்ரீத்திங்' என நீச்சலுக்கான அடிப்படை பயிற்சிகளும், 'ப்ரீ ஸ்டைல்' பட்டர்பிளை, ப்ரஸ்ட் ஸ்ட்ரோக், பேக் ஸ்ட்ரோக் என நீச்சல் போட்டிக்கான பிரிவுகளும் கற்றுத்தரப் படுகிறது. வேளாண் பல்கலை ஏழாவது எண் நுழைவு தோட்ட வாயில் அருகே அமைந்த நீச்சல் குளம் 1976ம் ஆண்டு நவ.,6ல் துவங்கப்பட்டது. 25 மீ., நீளம், 15 மீ.,அகலத்தில், 4 அடி ஆழத்திலிருந்து 12 அடி ஆழம் வரை உள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு முன் 2007ல் தினமும் தண்ணீரை மாற்றக்கூடிய அளவில் நவீனமுறையில் மாற்றப் பட்டது. நேற்று காலையிலிருந்து அடுத்த மாதம் 30ம் தேதி வரை தினமும் காலை 6.00 மணி முதல் 1.00 மணி வரையிலும், பெண்களுக்கென மாலை 3.00 மணி முதல் 4.00 மணி வரை பயிற்சி அளிக்கப்படுகிறது. ஐந்துவயது முதல் சிறியோர், பெரியோர் வயது வரம்பின்றி நீச்சலை கற்றுதர, வேளாண் பல்கலை உடற்கல்வி இயக்குனர் ராகவன், நீச்சல் பயிற்சியாளர்கள் பெருமாள், சசிக்குமார், குமரேசன் ஆகியோர் தயாராக உள்ளனர்.தொடர்புக்கு மொபைல்: 98426 50764, 94867 75495, போன் 0422- 6611 279 எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**காய்கறிச் செடிகளில் பூச்சி கட்டுப்படுத்த தீவிர முயற்சி**

கொடைக்கானல் : அதிக வெப்பத்தால், மலைப்பகுதியில் விளையும் காய்கறி செடிகளில் ஏற்பட்டுள்ள பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த முயற்சி மேற் கொள்ளப் பட்டுள்ளது.
கொடைக்கானலைச் சுற்றியுள்ள கிராமங்களில் பூண்டு,உருளை, பீன்ஸ், காரட் பயிரிடப்பட்டுள் ளது. தற்போது மழை குறைந்து, பகலில் 24 டிகிரி செல்சியஸ் வரை வெப் பம் நிலவுவதால், இச்செடிகளில் 'இலைப்பேன், அசோனி, வெள்ளை ஈ' போன்ற பூச்சிகளின் தாக்கம் அதிகரித்து மகசூல் பாதிக்கப் பட்டுள்ளது. பயிர்களை பாதுகாக்க தோட்டக் கலைத்துறை ஆலோசனை வழங்க வேண்டும் என விவசாயிகள் எதிர் பார்க்கின்றனர்.

**300 ஏக்கரில் நெல் நடவு தாமதம் கதிர்பிடிக்காமல் பதராகும் பரிதாபம்**

ஈரோடு: 'காலிங்கராயன் கால்வாயில் மார்ச் 15ம் தேதி தண்ணீர் நிறுத்தப்படும்' என மாவட்ட நிர்வாகம் அறிவித்தும், 300 ஏக்கரில் தாமதமாக  சாகுபடி செய்த நெற்பயிர் கதிர் பிடிக்காமல் காய்ந்து பதராகிறது. காலிங்கராயன் கால்வாயில் கழிவுநீர் கலப்பதை தடுக்கும் வகையில், வலது கரையில் கான்கிரீட் தடுப்புச்சுவர் கட்டுவதுடன், பழுதடைந்த மதகுகள்

சீரமைக்கவும், பாலங்கள் சீரமைக்கவும் 11.64 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, டெண்டர் கோரப்பட்டது. மார்ச் 15ம் தேதி கால்வாயில் தண்ணீர் நிறுத்தப்பட்டு பணிகள் துவங்குவதாக அறிவிக்கப்பட்டது. இருப்பினும், ஈரோடு பிராமண பெரிய அக்ரஹாரம், வைராபாளையம், கருங்கல்பாளையம் பகுதியில் 300 ஏக்கருக்கு மேல் ஜனவரி இறுதியில்தான் நெல் நடவுப் பணியை விவசாயிகள் துவக்கினர். இதனால், மார்ச் 15ல் கதிர் விடும் பருவத்தில் பயிர் இருந்தது. இவர்கள் கலெக்டர் சுடலைக்கண்ணனை சந்தித்து, தண்ணீர் திறப்பை நீடிக்க வலியுறுத்தினர். சென்ற 7ம் தேதி வரை தண்ணீர் திறப்பு நீட்டிக்கப்பட்டது. இருப்பினும், பெரும்பாலான விளை நிலங்களில் கதிர் விட்ட நிலையில், தண்ணீர் நிறுத்தப்பட்டதால், கதிர் அனைத்தும் பதராகி உற்பத்தி முற்றிலும் குறைய வாய்ப்புள்ளது. விவசாயி ஒருவர் கூறியதாவது:  கதிர்விட்டு காய்ந்த பயிரில் கதிர் பிடித்துவிடும். ஆனால் பெரும்பாலும்  பச்சையாக கதிர்விடும் பருவத்தில் உள்ளதால், கதிர் அனைத்தும் பதராகிவிடும். மேல் பாசனத்தில் 300 ஏக்கர் வரை இதுபோல் தாமதமாக நடவுப் பணியை துவக்கிய விவசாயிகள் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்**

பாரதிநகர் : மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஏப்., 23ல் காலை 10 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கலெக்டர் அலுவலக வளாகத்தில் நடக்கும் இக் கூட்டத்தில் பங்கேற்கும் விவசாயிகள், விவசாயம் குறித்து மட்டும் விவாதிக்க கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.  'விவசாயிகள் தொடர் பில்லாத கோரிக் கைகள் பரிசீலிக்கப்படமாட்டாது,' என, கலெக் டர் ஹரிஹரன் தெரிவித்தார்.

**பழைய தோட்டங்களை புதுப்பிக்க தோட்டக்கலைத்துறை மானியம்**

கம்பம் : பழைய தோட்டங்களை புதுப்பிக்க, மகசூல் குறைந்த அல்லது மகசூல் தராத பயிர்களை அகற்றி விட்டு, புதிய பயிர்களை சாகுபடி செய்ய தோட்டக்கலைத்துறை மானியம் வழங்குகிறது.

கம்பம் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் அலுவலக செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: கம்பம் பகுதியில் மா, நெல்லி மற்றும் முந்திரி தோப்புகளில் மகசூல் குறைந்திருந்தால், சம்மந்தப்பட்ட பயிர்களை முழுமையாக அகற்றி விட்டு, புதிய கன்றுகள் நடவு செய்ய விவசாயிகள் முன்வர வேண்டும். பூச்சி நோய் தாக்கி மகசூல் குறைந்திருந்தாலும் அல்லது ஆரம்ப கட்டத்தில் சரியாக பராமரிக்கப்படாமல் இருந்தாலும், அந்த தோப்புகளை முழுமையாக அகற்றி விட்டு, புதிய கன்றுகளை நடவு செய்ய விவசாயிகள் முன்வர வேண்டும். அவ்வப்போது பழைய தோட்டங்களை புதுப்பிப்பதன் மூலம் மகசூல் அதிகரிக்கும்.

அவ்வாறு செய்ய விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை ஒரு எக்டேருக்கு 15 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்குகிறது. மானிய உதவி கன்றுகள், இடுபொருள்கள், உரம் மற்றும் பூச்சி மருந்துகள் என வழங்கப்படும். விரும்பும் விவசாயிகள் தங்கள் தோட்டத்தின் சிட்டா, அடங்கல் போன்ற விபரங்களை கம்பம் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் சமர்ப்பித்து மானியம் பெற்றுக் கொள்ளலாம்' இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

**அரசுக்கு விதை விற்பனை செய்ய விவசாயிகள் ஆர்வம்**

தேனி : அரசுக்கு விதை விற் பனை செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

புள்ளியியல் துறை கொடுத்த விலை நிலவர அடிப்படையில் விவசாயிகளிடம் விதை கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. தற்போது விவசாய விற்பனைத்துறை கொடுக்கும் மதிப்பீட்டின் அடிப்படையில் விவசாயத்துறை விதை விற்பனை செய்கிறது. மாதந்தோறும் மார்க் கெட் மதிப்பு என்ன என் பதை விற்பனைத் துறை கணித்து மதிப்பீடு செய்கிறது. இதனால் விவசாயிகளுக்கு விலை நல்ல முறையில் கிடைக்கிறது.  தவிர விதைக்கு கொள்முதல் விலையை விட ஊக்கத்

தொகையுடன் சேர்த்து 12 சதவீதம் விலை அதிகம் வழங்கப்படுகிறது. இதனால் விவசாயிகள் விதைகளை அரசுக்கு வழங்குகின்றனர்.

சென்ற ஆண்டு 170 டன் விதை நெல் கொள்முதல் செய்ய விவசாயத்துறை இலக்கு நிர்ணயித்து இருந்தது. ஆனால் விவசாயிகள் 172 டன் விதை நெல் வழங்கினர். பயறு வகை விதைகள் 61 டன், எண்ணெய் வித்துக்கள் 44 டன் என அனைத்தும் இலக்கை விட அதிகம் வழங்கப்பட்டுள் ளது. சிறு தானியங்கள் விளைச்சல் அதிகம் இல்லாததால், நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 17 டன்னை விட ஒரு டன் குறைவாகவும், பருத்தி இலக்கான ஐந்தரை டன்னை விட இரண்டு டன் குறைவாக மூன்றரை டன்னும் வழங்கி உள்ளனர்.

**பருத்தி சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு வேளாண் விஞ்ஞானி ஆலோசனை**

செய்துங்கநல்லூர்: மாசிப்பட்டத்தில் பருத்தி சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு வேளாண் விஞ்ஞானி ஆலோசனை கூறியுள்ளார். சுமங்கலா, எம்சியூ.5, எல்ஆர்ஏ 5166 போன்ற ரகங்களைப் பயிரிட்டுள்ளவர்கள் பயிரினை நன்கு கண்காணிக்க வேண்டும். எஸ்விபிஆர் 2 ரகம் தத்துப்பூச்சி தாக்குதல் ஏற்பட்டாலும் தாங்கி வளர வல்லது. எனவே எஸ்விபிஆர் 2 ரகப்பயிரில் தத்துப்பூச்சி விரைந்து பரவி பாதிப்பினை ஏற்படுத்தாது.
தத்துப்பூச்சிகள் இலையில் சாற்றினை உறிஞ்சும். அதனால் இலையில் சுருக்கங்கள், மேடுபள்ளங்கள் காணப்படும். மஞ்சள் நிறம் இலையின் ஓரங்களில் இருந்து பரவும். கருகலும் ஓரங்களில் இருந்து ஆரம்பித்து பரவும். பயிரின் வளர்ச்சி குன்றும். தாங்கள் பயிரிட்டுள்ள பருத்தியில் எஸ்விபிஆர் 2 தவிர குறிப்பாக எம்.சி.யூ.5, எல்ஆர்ஏ 5166 மற்றும் சுமங்கலா தத்துப்பூச்சியினால் பாதிக்கப்பட்டால் ஏக்கருக்கு 200 மில்லி டைமீதோயேட் அல்லது 200 மில்லி மீதைல் டெமட்டான் மருந்தினைத் தெளித்துக் கட்டுப்படுத்தலாம். கைத்தெளிப்பான் என்றால் ஏக்கருக்கு இருநூறு லிட்டர் தண்ணீர் தேவைப்படும். விசைத்தெளிப்பான் என்றால் ஏக்கருக்கு அறுபது லிட்டர் தண்ணீர் இளம் பயிருக்கு தேவைப்படும். சாண்டோவிட், இன்ட்ரான் போன்றவற்றில் ஏதேனும் ஒன்றினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு அரை மில்லி வீதம் சேர்த்துக் கொள்ள வேண்டும். இது மருந்துக் கரைசல் இலைகளில் நன்கு படிய உதவும். மேலும் விவசாயிகள் தங்களின் இது போன்ற பயிர்ப்பாதுகாப்புப் பிரச்னைகளுக்குத் தக்க ஆலோசனை பெற, பாதித்த பயிர் மாதிரியுடன் வேளாண்மை அலுவலர், தோட்டக்கலை அலுவலர், வேளாண்மைக்கல்லூரிகள், வேளாண் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி நிலையங்கள் குறிப்பாக, ஸ்ரீவில்லிப்புத்தூரிலுள்ள பருத்தி ஆராய்ச்சி நிலையம், வேளாண்மை பட்டதாரிகளின் வேளாண்மை மருத்துவ நிலையங்கள் ஆகியவற்றை நேரில் அணுகி தக்க ஆலோசனை பெற்று முறையாக கடைப்பிடிக்குமாறு பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் ராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகள் சங்க செயற்குழு கூட்டம்**

செங்கம்: செங்கத்தில் தமிழக விவசாயிகள் சங்க வட்டார செயற்குழு கூட்டம் நடந்தது. கூட்டத்துக்கு வட்டார தலைவர் முனுசாமி தலைமை வகித்தார். நூறு நாள் வேலை திட்ட பணிகளை விவசாய பணிக்கு ஈடுபடுத்த வேண்டும். அனைத்து விவசாய சாகுபடிக்கும் கிணறு தூர்வார தேசியமயமக்கப்பட்ட வங்கிகளில் வட்டியில்லா கடன் வழங்க வேண்டும். விவசாய கிணறுகளில் உள்ள மின்மோட்டார்களுக்கு மீட்டர் பொருத்தும் திட்டத்தை கைவிட வேண்டும். கூட்டுறவு வங்கியில் கூட்டு பொறுப்புக்குழு கடன் வழங்குவதுபோல், தனிநபர் கடன் சிட்டா அடங்கல் இணைப்பு பெற்று அனைத்து விவசாய சாகுபடிக்கும் வழங்க வேண்டும், தனியார் மண்டியில் விளைபொருட்கள் கொள்முதல் செய்யும்போது, பிளாஸ்டிக் பையை அதிக அளவில் எடை கழிக்கும் முறையை விற்பனை குழு அலுவலர்கள் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாவட்ட தலைவர் சின்னதம்பி, உறுப்பினர்கள் காந்தி, ரகுபதி, கிருஷ்ணன், மணி, ராமசாமி, புருசோத்தமன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**உளுந்து சாகுபடிக்கான தொழில் நுட்பம் : விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி யோசனை**

மன்னார்குடி: மன்னார்குடி மற்றும் கோட்டூர் பகுதியில் உளுந்து சாகுபடி செய்யும் விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய தொழில் நுட்பங்கள் குறித்து மன்னார்குடி வேளாண் உதவி இயக்குனர் மயில்வாகணன் யோசனை தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: சித்திரை பட்டத்தில் ஆடுதுறை 5, டி.9, வம்பன் 3, 4, 5 ரகங்கள் பயிரிட ஏற்றது. ஒரு ஏக்கருக்கு 8 கிலோ விதை தேவைப்படும். கடந்த தை பட்டத்தில் இறவை உளுந்து சாகுபடி செய்த பகுதிகளில் தண்டு ஈ தாக்கி பயிர் வளர்ச்சி பருவத்தில் அதிகளவில் பட்டுப்போய் விட்டது. இந்த பூச்சி தாக்குதலில் இருந்து பயிரை பாதுகாக்க விதை நேர்த்தி செய்ய வேண்டியது அவசியம். ஒரு ஏக்கருக்குத் தேவையான 8 கிலோ விதைக்கு டை மெத்தோபேட் மருந்து 40 மில்லியுடன் 160 மில்லி தண்ணீர் மற்றும் சிறிதளவு கோந்து சேர்த்து இந்த கலவையை 8 கிலோ விதையுடன் கலந்து நிழலில் உலர்த்தி 24 மணி நேரம் கழித்து அந்த விதையுடன் 32 கிராம் டிரைகோடெர்மா விரிடி கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். விதைப்பதற்கு முன்பு 1 பாக்கெட் ரைசோபியத்தை ஆறிய வடிகஞ்சி 200 மில்லியுடன் கலந்து விதையுடன் கலந்து நிழலில் உலர்த்தி விதைப்பு செய்ய வேண்டும். ஏக்கருக்கு 45 கிலோ டி.ஏ.பி., 5 கிலோ யூரியா மற்றும் 17 கிலோ பொட்டாஷ் உரங்களை கலந்து அடியுரமாக இடவேண்டும். கடைசி உழவுக்கு முன்பு ஏக்கருக்கு 5 டன் தொழு உரமிடுவது அவசியம். வரிசைக்கு வரிசை 1 அடி இடைவெளியில் செடிக்கு செடி 4 அங்குலம் இடைவெளி கொடுத்து விதைப்பு செய்ய வேண்டும். விதைத்த 25ம் நாளில் ஒரு ஏக்கருக்கு 2 கிலோ அளவில் பயறு வகை நுண்சத்து உரத்தை 200 லிட்டர் நீரில் கரைத்து மாலை வேளையில் தெளிக்க வேண்டும். 10 சதவீத பூக்கள் வரும் நிலையில் ஒரு ஏக்கருக்கு 4 கிலோ டி.ஏ.பி.,யை முதல் நாள் மாலையில் 10 லிட்டர் நீரில் ஊற வைக்க வேண்டும். மறுநாள் காலை தெளிந்த கரைசலை மட்டும் எடுத்துக் கொண்டு அதில் 140 மில்லி பிளானோபிக்ஸ் கலந்து 190 லிட்டர் நீரில் கரைத்து மாலை வேளையில் தெளிக்க வேண்டும். இதனால் பூக்கள் உதிர்வது குறைந்து காய்பிடிப்பு அதிகரிக்கும். மீண்டும் 15 நாட்கள் கழித்து இரண்டாம் முறை இலைவழி டி.ஏ.பி., தெளிக்க வேண்டியது அவசியம்.

**நீர்ப்பாசன சங்க பிரதிநிதிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி முகாம்**

உளுந்தூர்பேட்டை : உளுந்தூர்பேட்டையில் வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் கெடிலம் உப வடி நில பகுதி நீர்பாசன சங்க பிரதிநிதிகளுக்கு தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப் பட்டது.

வேளாண் வணிக துணை இயக்குனர் தனவேல் தலைமை தாங்கினார். கோட்ட வேளாண் அலுவலர் செந்தில் வரவேற்றார். உழவியல் மண் டல ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியர் செல்வராஜ், பூச்சியியல் துறை பேராசிரியர் இந்திரகாந்தி, வேளாண் உதவி இயக்குனர் ரவீந்திரன், வேளாண் அலுவலர் பெரியசாமி, தோட்டக் கலை அன்பழகன், வேளாண் பொறியியல் துறை பாண்டியன், பொதுப் பணித்துறை ரவீந்திரன், கால்நடைத்துறை உதவி இயக்குனர் துரைராஜன், மீன்வள ஆய்வாளர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் பயிற்சி அளித்தனர். ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் மணி, கோவிந்தராஜன், முத்து ஆகியோர் செய்திருந்தனர். உதவி வேளாண் அலுவலர் சரவணன் நன்றி கூறினார்.

**தக்காளி விளைச்சல் பாதிப்பு: விலை அதிகரிக்க வாய்ப்பு**

பொங்கலூர் : பொங்கலூர் பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் தக்காளி சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. தை, மாசி ஆகிய பனிக் காலங்களில் நல்ல மகசூல் கிடைத்து வந்தது. வழக்கமாக, கோடை காலத்தில், அதிக வெப்பம் காரணமாக

பூக்கள் உதிர்வதாலும், மழை காலத்தில் பழங்கள் அழுகி விடு வதாலும் விளைச்சல் குறைந்து விடும். இதனால், தக்காளி விலை ஏற்றம் தவிர்க்க முடியாததாகி விடும்.
தற்போதைய சீசனில் நல்ல விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில், விவசாயிகள் தக்காளியை நடவு செய்திருந்தனர். கோடை வெயில் கொளுத்துவதால், செடிகள் நன்கு வளர்ச்சி அடைவது பாதிக்கப்பட்டுள்ளது; நடவு செய்தவற்றில் பாதி நாற்றுகள் பட்டுப்போய் விட்டன; பூக்கள் உதிர்ந்து வருகின்றன.
செடிக்கு நான்கைந்து காய்கள் மட்டுமே காணப்படுகின்றன. இவற்றையும் கிளி, மயில், அணில் போன்றவை சேதப்படுத்தி விடுகின்றன. விளைச்சல் குறைவு விவசாயிகளை கவலைப்படச் செய்துள்ளது. வழக்கமாக ஏக்கருக்கு நான்கு டன் மகசூல் கிடைக்கும். தற்போது பத்தில் ஒரு பங்கு மட்டுமே மகசூல் கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த வாரம் ஐந்து கிலோ கொண்ட கூடை 30 ரூபாய்க்கு விற்றது; நேற்றைய நிலவரப்படி, கூடை 50 ரூபாய்க்கு விற் பனையானது. விளைச்சல் பாதிப்பு எதிரொலியாக, விலை உயரக்கூடிய வாய்ப்பு அதிகரித்துள்ளது. விலை ஏற்றம் காணப்பட்டாலும், விளைச்சல் குறைவு விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

**மக்காச்சோளத்திற்கு சீரான விலை!**

உடுமலை : மக்காச்சோளத்தின் தேவை அதிகரிப்பு, வறட்சியால் வரத்து குறைவு போன்ற காரணங்களினால் இந்தாண்டு மக்காச்சோளத்தின் விலையில், ஏற்ற, இறக்கம் இல்லாமல் சீராக உள்ளது. தமிழகத்தில் ஆண்டு தோறும் 4.50 லட்சம் ஏக்கர் பரப்பளவில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்படுகிறது. ஆகஸ்ட்டில் துவங்கும் காரீப் பருவத்தில் 70 சதவீதம் சாகு படியும், கோடை காலத்தில் துவங்கும் ராபி பருவத்தில் 30 சதவீதம் சாகுபடியும் செய்யப்படுகிறது. தமிழக மக்காச்சோள உற்பத்தி ஆண்டுக்கு 13 முதல் 15 லட்சம் டன்னாக உள்ளது. கறிக்கோழி உற்பத்தி நிறுவனங்களுக்கு ஆண்டு தோறும் 22 லட்சம் டன் மக்காச்சோளம் தேவை உள்ளது.
மீதி தேவைக்கு அண்டை மாநிலங் களான கர்நாடகம், ஆந்திரா மாநிலங்களை நம்பி இருக்க வேண்டிய நிலை உள்ளது. தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழை இந்தாண்டு ஏமாற்றிய நிலையில், மானாவாரி மற்றும் இறவை பாசனத்தில் செய்யப்படும் மக்காச்சோளம் சாகுபடி மற்றும் ராபி பருவ சாகுபடி 20 சதவீதம் வரை குறைந்தது. காரீப் பருவ சாகுபடி மகசூலும் வெகுவாக குறைந்தது. கர்நாடகா மற்றும் ஆந்திரா மாநிலங்களில் இருந்தும் ழக்கமாக மக்காச்சோளம் வரத்து குறைந்தே காணப்படுகிறது.இதனால், மக்காச்சோளம் விலை ஒரே சீராக உள்ளது. 2009 நவ.,ல் 100 கிலோ மூட்டை ஆயிரம் ரூபாய் வரை விற்றது. வரத்து அதிகரித்தபோது மூட்டைக்கு 50 ரூபாய் வரை குறைந்தது.மக்காச்சோளத்திற்கு தட்டுப்பாடு ஏற்படலாம் என கோழித்தீவன உற்பத்தி நிறுவனங்கள் போட்டி, போட்டு கொள்முதல் செய்து இருப்பு வைக்கத்துவங்கின. இதனால், முதல் நான்கு மாதங்கள் ஒரு மூட்டை மக்காச்சோளம் 950 ரூபாய் முதல் 980 வரை விலை நிலவியது.கடந்த பிப்ரவரி இறுதியில், கொள்முதல் செய்வதை தற்காலிகமாக நிறுத்தியதால் 880 ரூபாயாக குறைந்தது. சில ōட்களில் கொள்முதல் மீண்டும் தீவிரமடைந்ததையடுத்து, விலை உயரத் துவங்கியது. கடந்த வாரம் ஒரு மூட்டை மக்காச்சோளம் 980 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்பட்டது. நேற்று, டெலிவ ரி விலை 950 ரூபாயாக இருந்தது. ஆண்டு தோறும் மக்காச்சோளம் விலையில் பெரிய அளவிலான ஏற்ற, இறக்கம் காணப்படும். ஆனால், இந்தாண்டு வரத்து குறைவு காரணமாக விலையில் பெரிய அளவில் மாற்றங்கள் இல்லை.வரத்து படிப்படியாக குறைந்து வரும் நிலையில், மக்காச்சோளத்தின் விலை மேலும் உயரும் வாய்ப்புள்ளது.

**வாழையை காக்க யோசனை**

திருப்பூர் : 'சுழல் காற்றுடன் மழை பொழியும் காலம் துவங்கி விட்டதால், வாழை பயிர்களுக்கு முட்டுக்கொடுத்தல் அவசியம்; முன்னெச்சரிக்கை பணிகளை, விவசாயிகள் செய்து கொள்ள வேண்டும்' என, தோட்டக்கலைத்துறை

அறிவுறுத்தியுள்ளது.திருப்பூர், பொங்கலூர் சுற்றுப்பகுதிகளில் நூற்றுக்கணக்கான விவசாயிகள் வாழை பயிர் செய்துள்ளனர். சித்திரை மாதம் துவங்கியுள்ளதால், கார்மழையோடு சுழல் காற்று வீசும். குழை தள்ளிய வாழைகள் காற்றுக்கு விழுந்து, விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தும் வாய்ப்புள்ளது. Õற்று காலத்தில், வாழையை பாதுகாக்க முட்டுக்கொடுத்தல் அவசியம்.தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் சந்தானகிருஷ்ணன் கூறியதாவது:சித்திரை மாதத்தில் காற்றுடன் கூடிய கார் மழை பெய்யும். தற்போது வாழை பயிரிட்டுள்ள விவசாயிகள், காற்றில் இருந்து வாழையை பாதுகாப்பது சவாலான பணி. குழை தள்ளிய வாழைகளுக்கு மூங்கில் குச்சிகளை கொண்டு முட்டுக்கொடுத்தல் அவசியம். சுழல் காற்றுடன் கூடிய மழை காலம் துவங்கி விட்டதால், முன்னெச்சரிக்கை பணிகளை செய்து கொள்ள வேண்டும்.தொடர்ந்து வாழை பயிரிடும் விவசாயிகள், சவுக்கு மற்றும் அசோக மரங்களை நெருக்கமாக வளர்க்கலாம். தோட்டத்தைச் சுற்றிலும் மரங்களை வளர்க்கும் போது, காற்றின் வேகத்தை குறைத்து, வாழையை காப்பாற்ற முடியும், என்றார்.

**தேங்காய் நேரடி கொள்முதல்: 'டான்பேட்' கைவிரிப்பு**

ஏப்ரல் 16,2010,00:00 IST

பொள்ளாச்சி:'விவசாயிகளிடம் இருந்து நேரடி தேங்காய் கொள்முதல் செய்யும் திட்டம் இப்போதைக்கு இல்லை' என, 'டான்பேட்' அதிகாரிகள் கைவிரித்துள்ளனர். டான்பேட் அதிகாரிகள் கூறியதாவது:வி வசாயிகளிடமிருந்து தேங்காயை நேரடியாக கொள்முதல் செய்தால், அதை பதப்படுத்துவதில் நிறைய சிக்கல் உள்ளது. மட்டை உரிக்கப்பட்ட குடுமி இல்லாத தேங்காயை விவசாயிகள் கொண்டு வர வேண்டும். அதை எடைக்கணக்கில் கொள்முதல் செய்ய வேண்டும்.

கூட்டுறவு சங்கம் மூலமோ, தனியார் கொப்பரை உலர்க்களம் வைத்துள்ளவர்களிடமோ உடன்பாடு செய்து கொப்பரை உற்பத்தி செய்ய வேண்டும். கொப்பரையாக்கும் போது, 'அவுட்புட்' கிடைக்காவிட்டால், அதிகாரிகளுக்கு சிக்கல் ஏற்படும். மேலும், கூட்டுறவுச் சங்கத்துக்கு உலர்களம் வசதியில்லை. அதனால், இந்தாண்டு தேங்காய் நேரடி கொள் முதல் துவங்குவதற்கு வாய்ப்பு இல்லை. விவசாயிகள் கொப்பரை உற்பத்தி செய்து, ஆதரவு விலைக்கு விற்பனை செய்ய வேண்டும்.இவ்வாறு, அவர்கள் தெரிவித்தனர்.

தமிழகத்தில் இந்தாண்டு விவசாயிகளிடம் இருந்து நேரடி தேங்காய் கொள்முதல் துவங்கப்படும் என, விவசாயிகள் காத்திருந்த நேரத்தில், நேரடி தேங்காய் கொள்முதலுக்கு சாத்தியமில்லை என, அதிகாரிகள் கைவிரித்துள்ளனர்.தேங்காய் கொள்முதலுக்கு மத்திய அரசு பச்சைக்கொடி காட்டியும், மாநில அரசு முயற்சி எடுக்காததால் தாங்கள் ஏமாற்றம் அடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**தினத் தந்தி**

***ஜெர்மன் பல்கலைக்கழகத்துடன் கோவை வேளாண் பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம்***

---

*கோவை, ஏப்.16–*

*கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், ஜெர்மனி நாட்டின் கீசன் நகரில் இயங்கி வரும் ஜஸ்டஸ் லீபிக் பல்கலைக்கழகமும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பரிமாற்றத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி கொண்டது.*

*வேளாண் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் வேளாண் பல்கலைக்கழகம் சார்பில் பதிவாளர் சுப்பையன், முதுநிலை கல்வி முதல்வர் உதயசூரியன், ஜஸ்டஸ் லீபிக் பல்கலைக்கழகம் சார்பில் பயன்பாட்டு நுண்ணுயிரியல் துறை பேராசிரியர் பென்கிசர் ஆகியோர் கையெழுத்திட்டனர்.*

*இதன் மூலம் இரண்டு பல்கலைக்கழகங்களில் இருந்தும் விஞ்ஞானிகள் மற்றும் மாணவர்கள் கல்வி மற்றும் ஆராய்ச்சி சம்பந்தமான தகவல் பரிமாற்றம், கூட்டு கல்வி, ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பித்தல் மற்றும் கருத்தரங்குகளை மேற்கொள்ள முடியும்.*

*இந்த ஒப்பந்தம் குறித்து வேளாண் பல்கலைக்கழக பதிவாளர் சுப்பையன் கூறியதாவது:–*

*கோவை வேளாண் பல்கலைக்கழக வேளாண் நுண்ணுயிரியல் துறை மற்றும் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த ஜஸ்டஸ் லீபிக் பல்கலைக்கழக பயன்பாட்டு நுண்ணுயிரியல் துறை இணைந்து ஜவ்வரிசி தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் கழிவு நீரை சுத்திகரிக்கும் பொருட்டு நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்ட செயற்கை நஞ்சை தொட்டிகளை உருவாக்கி உள்ளது. இந்த தொட்டியில் உள்ள நுண்ணுயிர்களின் பல்லுயிர் பாங்கினை ஆய்வு செய்வதற்கான திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இது கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றியாகும்.*

*இவ்வாறு சுப்பையன் கூறினார்.*

*இந்த நிகழ்ச்சியில் வேளாண் நுண்ணுயிரியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் குமார், முதுநிலை கல்வி பேராசிரியர் ராஜசேகரன் மற்றும் அறிவியலாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.*

***பணவீக்கத்தை கட்டுக்குள் கொண்டுவர அத்தியாவசிய உணவு பொருள்கள் இறக்குமதி 43 சதவீதம் அதிகரிப்பு***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*நாட்டில் தேவைப்பாட்டை ஈடுகட்டுகின்ற வகையில் உணவு பொருள்கள் உற்பத்தி இல்லாததால், பணவீக்கம் அதிகரித்து வருகிறது. இதனை எதிர்கொள்ளும் வகையில், மத்திய அரசு, சமையல் எண்ணெய், பருப்பு வகைகள் மற்றும் சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசிய உணவு பொருள்களை அதிக அளவில் இறக்குமதி செய்து வருகிறது. இதனை வெளிப்படுத்துகின்ற வகையில், சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டின் முதல் 9 மாதங்களில், இவற்றின் இறக்குமதி 42.6 சதவீதம் அதிகரித்து ரூ.48,531 கோடியாக உயர்ந்துள்ளது. முந்தைய நிதி ஆண்டின் இதே காலத்தில் இது ரூ.34,031 கோடியாக இருந்தது.*

*சமையல் எண்ணெய்*

*இதே காலத்தில், சமையல் எண்ணெய் இறக்குமதி 72 சதவீதம் அதிகரித்து ரூ.10,933 கோடியிலிருந்து ரூ.18,757 கோடியாக உயர்ந்துள்ளது. சமையல் எண்ணெய் இறக்குமதியில் இந்தியா உலக அளவில் முதலிடத்தில் உள்ளது. சென்ற மார்ச் மாதத்தில், சமையல் எண்ணெய் இறக்குமதி அளவின் அடிப்படையில் 6.12 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே மாதத்தில் 6.09 லட்சம் டன்னாக இருந்தது.*

*நடப்பு நிதி ஆண்டின் முதல் 9 மாதங்களில் பால் மற்றும் பால் பொருள்கள் இறக்குமதி வியக்கத்தக்க வகையில் 588.4 சதவீதம் அதிகரித்து ரூ.34.05 கோடியிலிருந்து ரூ.234.44 கோடியாக உயர்ந்துள்ளது. இதே காலத்தில், தேயிலை மற்றும் காபி இறக்குமதி 68 சதவீதம் உயர்ந்து ரூ.130 கோடியிலிருந்து ரூ.219 கோடியாக அதிகரித்துள்ளது.*

*நாட்டில் உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 20 சதவீதத்தை நெருங்கி உள்ளது. இதனை கட்டுப்படுத்தும் வகையில், சர்க்கரை மற்றும் சமையல் எண்ணெய் போன்றவற்றை தீர்வை இன்றி இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. மேலும், அண்மையில் பருப்பு வகைகள் இறக்குமதி மீதான சலுகைத் திட்டங்களை*

மார்ச் 31–ந் தேதியிலிருந்து செப்டம்பர் 30–ந் தேதி வரை நீட்டித்துள்ளது.

பருப்பு வகைகள் பயன்பாடு மற்றும் இறக்குமதியில் இந்தியா உலக அளவில் முதலிடத்தில் உள்ளது. இந்தியாவில் ஆண்டுக்கு 1.70–1.80 கோடி டன் பருப்பு வகைகள் தேவைப்படுகிறது. அதேசமயம், நடப்பு ஆண்டில் உற்பத்தி 1.47 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆக, பற்றாக்குறை 33 லட்சம் டன்னாக உள்ளது.

சர்க்கரை

நடப்பு சர்க்கரை பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) நம் நாட்டில் 1.60 கோடி டன் சர்க்கரை உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், தேவைப்பாடு 2.40 கோடி டன்னாக உள்ளது. ஆக, தேவையை ஈடுகட்டும் அளவிற்கு சர்க்கரை உற்பத்தி போதுமான அளவில் இல்லை. அதேசமயம், வரும் பருவத்தில் உற்பத்தி நன்றாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதுபோன்ற காரணங்களால், சென்ற ஆண்டின் முதல் 9 மாதங்களில், அத்தியாவசிய உணவு பொருள்கள் இறக்குமதி 43 சதவீதம் உயர்ந்துள்ளது. அதேசமயம், இதே காலத்தில் நாட்டின் மொத்த இறக்குமதி 21 சதவீதம் குறைந்து ரூ.11.26 லட்சம் கோடியிலிருந்து ரூ.9.28 லட்சம் கோடியாக குறைந்துள்ளது.

உலக அளவில் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலையால், பொருள்கள் விற்பனை குறைந்து, நிறுவனங்கள் விரிவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்வதை ஒத்தி வைத்திருந்தன. இதனால்தான் நடப்பு நிதி ஆண்டின் முதல் 9 மாதங்களில் ஒட்டுமொத்த அடிப்படையில் ஏற்றுமதி சரிவடைந்துள்ளது. இந்நிலையில், சென்ற சில மாதங்களாக நாட்டின் ஒட்டுமொத்த இறக்குமதி தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

சென்ற நிதி ஆண்டின் முதல் 9 மாதங்களில் ஒட்டுமொத்த இறக்குமதியில், அத்தியாவசிய உணவு பொருள்கள் இறக்குமதி மதிப்பின் அளவு 3 சதவீதமாக இருந்தது. இது, நடப்பு நிதி ஆண்டின் முதல் 9 மாதங்களில் 5.2 சதவீதமாக அதிகரித்துள்ளது.

பிரேசில்

இந்தோனேசியா, சீனா, பிரேசில், மலேசியா, அமெரிக்கா, கனடா, ஜப்பான், அர்ஜென்டினா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து மேற்கொள்ளப்படும் அத்தியாவசிய உணவு பொருள்கள் இறக்குமதி தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அதேசமயம், கொரியா, ஜெர்மனி, தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து அத்தியாவசிய உணவு பொருள்கள் இறக்குமதி செய்யும் அளவு குறைந்து வருகிறது.

சென்ற 2009–ஆம் ஆண்டில், நாட்டில் பருவமழை கடந்த 38 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு மிகவும் குறைந்து போனது. இதனால்தான் எண்ணெய் வித்துக்கள், உணவு தானியங்கள் உற்பத்தி குறைந்து, அத்தியாவசிய உணவு பொருள்கள் விலை உயர்ந்துள்ளது.

பருவமழை

இந்நிலையில், இவ்வாண்டில், இந்தியாவில் பருவமழை நன்றாக இருக்கும் என்று அமெரிக்க மற்றும் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த வானிலை முன்னறிவிப்பு மையங்கள் கணித்துள்ளன. அரிசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் உற்பத்தியில் உலக அளவில் முன்னிலை வகித்து வரும் நாடுகளுள் இந்தியாவும் ஒன்றாகும்.

இதனால்தான் வெளிநாட்டு அமைப்புகள், இந்தியாவில் பருவமழை எப்படி இருக்கும் என்பதை தெரிந்து கொள்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றன.

வரும் ஜூலை மாதத்திற்குப் பிறகு நாட்டின் பணவீக்க விகிதம் குறைய வாய்ப்புள்ளது என்று மத்திய நிதி அமைச்சகத்தின் தலைமை பொருளாதார ஆலோசகர் கவுசிக் பாசு தெரிவித்தார்.

# கொத்து, கொத்தாய் பலாக்கள்



கூடலூர் பகுதியில் பலா காய்கள் காய்க்க தொடங்கி உள்ளன. இதனால் எங்கு திரும்பினாலும் பலா காய்களை காண முடிகிறது. ஒரு மரத்தில் கொத்து கொத்தாக காய்த்துள்ள பலா காய்களை படத்தில் காணலாம்.

# பீன்ஸ் விலை அதிகரிப்பு

## விவசாயிகள் மகிழ்ச்சி

கொலக்கம்பை,ஏப்.16–

பீன்ஸ் விலை அதிகரிப்பு காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### மலை தோட்ட காய்கறிகள்


நீலகிரி மாவட்டத்தில் முக்கிய பணப்பயிராக விளங்கி வந்த பச்சை தேயிலைக்கு கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு கடுமையான விலை வீழ்ச்சி ஏற்பட்டது. இதனால் விவசாயிகள் மலை தோட்ட காய்கறிகளை விவசாயம் செய்ய ஆரம்பித்தனர்.

இதன்படி உருளைகிழங்கு, பீன்ஸ், கேரட், முட்டை கோஸ், காளி பிளவர், மேரக்காய் உள்பட பல்வேறு காய்கறிகளை விவசாயம் செய்து வருகின்றனர்.

### நல்ல விலை

இந்த காய்கறிகளில் தற்போது பீன்ஸ்களுக்கு நல்ல விலை கிடைக்கிறது. கொலக்கம்பை பகுதிகளில் உள்ள விவசாயிகள் பெரும்பாலானவர்கள் தங்களது நிலங்களில் பீன்ஸ் பயிரிட்டுள்ளனர்.

இவர்கள் புஷ் பீன்ஸ் அதிகளவில் பயிரிட்டுள்ளனர். தற்போது இந்த புஷ் பீன்ஸ் ஒரு கிலோ ரூ.38க்கு விற்பனை ஆகி வருகிறது. இது குறித்து



கொலக்கம்பை அருகே உள்ள தூதூர் மட்டத்தை சேர்ந்த விவசாயி சசிக்குமார் என்பவர் கூறிய தாவது:–

தூதூர்மட்டத்தில் உள்ள விவசாய நிலங்களில்பீன்ஸ் விவசாயம் செய்வதற்கு ஏற்றவாறு மண்ணின் தன்மை உள்ளது. இதனால் இந்த பகுதிகளில் நாங்கள் அதிக அளவு பீன்ஸ் விவசாயம் செய்துள்ளோம்.

புஷ் பீன்ஸ், பாம்பே பீன்ஸ் போன்றவகை பீன்ஸ்களை பயிரிட்டுள்ளோம். இதில் புஷ் பீன்ஸ்க்கு தற்போது நல்ல விலை கிடைக்கிறது.

### மகிழ்ச்சி

கடந்த பிப்ரவரி மாதம் நடவு செய்யப்பட்ட பீன்ஸ் தற்போது அறுவடைக்கு தயாராக உள்ளது. நல்ல விலை கிடைப்பதால் நாங்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளோம். மேட்டுப்பாளையத்தில் உள்ள மொத்த காய்கறி மண்டிக்கு விற்பனைக்காக கொண்டு செல்கிறோம். கேரளா, கர்நாடகா, சென்னை, கோவை போன்ற பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வந்து மொத்தமாக வாங்கி செல்கிறார்கள். கேரளாவில் கொண்டாடப்படும் சித்திரைகனி பண்டிகையை முன்னிட்டு பீன்ஸ்க்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. இதே விலை தொடர்ந்து நீடித்தால் நன்றாக இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.